(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 02.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2010, மே 04, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

### பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினின்றும் விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1),— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் இது முதற்கொண்டு செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை ஆகிய தினங்களில் சபை அமர்வு நேரம் மு. ப. 9.30 மணி முதல் பி. ப. 12.30 மணி வரையும், பி. ப. 1.00 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையிலும், வெள்ளிக்கிழமை தினங்களில் மு. ப. 9.30 மணி முதல் பி. ப. 1.00 மணி வரையும் இருக்குமாக. செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை ஆகிய தினங்களில் பி. ப. 3.30 மணிக்கும், வெள்ளிக்கிழமை தினங்களில் நண்பகல் 12.00 மணிக்கும் 7 (5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை ஆகிய தினங்களில் பி.ப. 4.30 மணிக்கும், வெள்ளிக்கிழமை தினங்களில் பி.ப. 1.00 மணிக்கும் சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2),— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் இன்றைய தினம் பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமாக. பி. ப. 4.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

4.

பராளுமன்றச் சபை முதல்வர்,— தெரிவுக்குழு (இல.1),— 121 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் நடப்புக் கூட்டத்தொடரின் சேவைக்கான தெரிவுக்குழு சபாநாயகரின் தலைமையிலும் அரசியற் கட்சிகளின் தலைவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளாகிய பாராளுமன்றத்தினால் பெயர் குறிப்பிடப்படும் பதினேழு (17) உறுப்பினர்களைக் கொண்டு அமைந்திருத்தல் வேண்டும்.

5.

பராளுமன்றச் சபை முதல்வர்,— தெரிவுக்குழு (இல.2),— இன்றைய தினம் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையின் பிரகாரம் நடப்புக் கூட்டத்தொடரின் போது இத்தெரிவுக் குழுவில் தவிசாளராக சபாநாயகரும், பின்வரும் பதினேழு (17) உறுப்பினார்களும் சேவையாற்றுவார்களாக

கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா

கௌரவ தினேஷ் குணவர்தன

கௌரவ டியூ குணசேகர

கௌரவ நிமல் சிறிபால த சில்வா

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ பெஸில் ரோஹண ராஜபக்ஷ

கௌரவ விமல் வீரவங்ச

கௌரவ மைத்திரிபால சிறிசேன

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ கரு ஜயசூரிய

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ ஆறுமுகன் தொண்டமான்

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ சுரேஷ் க. பிரேமச்சந்திரன்

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ இராஜவரோதியம் சம்பந்தன்

கௌரவ ரஊப் ஹகீம்

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால் மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2010 மே மாதம் 02 ஆம் திகதியிலிருந்து இலங்கையெங்கனும் நடைமுறைப்படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப் படுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.